[2022 மே 10

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 256, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

256—

ஜவுளிப் பூங்கா

***1635—திரு. ஆ.மு. முனிரத்தினம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் மற்றும் பணப்பாக்கத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோளிங்கர் மற்றும் பணப்பாக்கத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம் அவர்கள்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதி, நெசவாளர்கள் நிறைந்த தொகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தலுக்கு முன்பு 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற நிகழ்ச்சி பணப்பாக்கத்தில் நடந்தபோது அப்பகுதி மக்கள் எல்லோரும் ஜவுளிப் பூங்கா அமைப்பதன் அவசியம் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனு அளித்துள்ளனர். எனவே, நெசவாளர்கள் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு, விரைவில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

2022 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சோளிங்கர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. முனிரத்தினம் அவர்களின் கோரிக்கை, நியாயமான கோரிக்கைதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற நிகழ்ச்சியை அங்கேதான் நடத்தினார்கள். சோளிங்கர் தொகுதி, நெசவாளர்கள் நிறைந்த பகுதிதான். இருந்தாலும், இன்றிருக்கிற நிலைமையில், அங்கே நிலம் தேவை. நிலம் கொடுத்தால்* Integrated Textile Park *திட்டத்தின்கீழ் முதலீட்டாளர்கள் முன்வந்தால் நிச்சயமாக அங்கே ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம் அவர்கள்.*

திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டத்தின் நிலையை நன்கு அறிவார்கள். அப்பகுதி மக்கள் நெசவுத் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். அங்கிருக்கும்* SIPCOT *இடத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜவுளிப் பூங்கா அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால், அங்கே 10,000 நெசவாளர்கள் இருக்கிறார்கள். அது அவர்களுடைய வாழ்வாதாரம். ஆகவே, தயவுசெய்து ஜவுளிப் பூங்கா அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான கோரிக்கை நிறைவேற்றப்படும். அதுமட்டுமல்லாமல், ஜவுளிப் பூங்காவுக்காக நாகப்பட்டினத்தில்* Veda Textile Park *அமைத்திட 11-1-2022 அன்று ஒன்றிய அரசிடம் அனுமதி கோரப்பட்டது. அதற்கு ஒன்றிய அரசு இதுவரைக்கும் அனுமதி வழங்கவில்லை. இந்நிலையில், 6-5-2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பருத்தி* imported duty-*ஐ 11% ஆகக் குறைப்பதற்காக சில முயற்சிகள் எடுத்து, அந்த முயற்சியினால் ஒன்றிய அரசு அதை இரத்து செய்தது.*

அதற்கு நாங்கள் நன்றி சொல்வதற்காக, மாண்புமிகு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் திரு. பியுஷ் கோயல் அவர்களையும், நிதியமைச்சர் அவர்களையும் சந்தித்தோம். அப்பொழுது இந்தக் கோரிக்கையுடன் நிறைய கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். பல சட்டமன்ற உறுப்பினர்கள் ஜவுளிப் பூங்கா அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டம் கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தோடு முடிவடைந்துள்ளது. அது தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதற்கு அனுமதி வந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக பணப்பாக்கத்தில் ஜவுளிப் பூங்காவை அமைத்துக் கொடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 257, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

257—

ஆரம்ப சுகாதார நிலையம்

***11722—திரு. செ. கிருஷ்ணமுரளி:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புளியரை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) 30 படுக்கை வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்துவது என்பது அரசின் கொள்கை முடிவு. அந்தவகையில், ஏற்கெனவே செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில், இலத்தூர்